


09. 09. 2025

தலைப்பு செய்திகள்

- நாட்டின் 17-வது குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் பிரதமர் திரு. நரேந்திரமோடி தமது வாக்கை இன்றுகாலை பதிவுசெய்தார்.
- ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதலில் நம்நாட்டின் அனைத்து செயற்கைகோள்களும் முழுமையாக செயல்பட்டு, தேசத்தின் தேவையை பூர்த்தி செய்ததாக இஸ்ரோ தலைவர் திரு. வி. நாராயணன் தெரிவித்துள்ளார்.
- தமிழகம் அனைத்து துறைகளிலும் முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.
- கோவை, நீலகிரி, செங்கல்பட்டு, விழுப்புரம், திருவண்ணாமலை, திருச்சி உள்ளிட்ட 11 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.
- 17-வது ஆசியகோப்பை 20-20 கிரிக்கெட் போட்டிகள் அபுதாபியில் இன்று தொடங்குகின்றன.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

குடியரசு துணைத்தலைவர் தேர்தல்

நாட்டின் 17-வது குடியரசு துணைத்தலைவர் தேர்தல் இன்று முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

நாடாளுமன்ற வளாகத்தில் காலை 10 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 5 மணிவரை தெடர்ந்து நடைபெறும்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தமது வாக்கை முதலில் செலுத்தினார்.

மத்திய அமைச்சர்கள் திரு.ராஜ்நாத்சிங், திரு. ஜீதேந்திர சிங், அஷ்விணி வைஷ்ணவ்,

காங்கிரஸ் கட்சி தலைவர், திரு. மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு.ராகுல்காந்தி, காங்கிரஸ் கட்சியின் திருமதி. சோனியா காந்தி உள்ளிட்டோரும் வாக்குகளை பதிவு செய்துள்ளனர்.

வாக்கு எண்ணிக்கை 6 மணிக்கு தொடங்கி முடிவுகள் உடனடியாக வெளியிடப்படும்.

தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக திரு.சி.பி. ராதாகிருஷ்ணனும்,

INDI கூட்டணி வேட்பாளராக முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி B. சுதர்ஷன் ரெட்டியும் களத்தில் உள்ளனர்.

மக்களவையில் 542 உறுப்பினர்களும்,

மாநிலங்களவையில் 239 உறுப்பினர்களும் என 781 வாக்காளர்கள் உள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் வெற்றி பெற 391 வாக்குகள் பெறுவது அவசியமாகும்.

இதனிடையே இந்த தேர்தலில் பி.ஜே.பி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் அமோக வெற்றி பெறுவார் என்று அக்கட்சியினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர் பஞ்சாப்

பிரதமர் திரு. நரேந்திரமோடி பஞ்சாப்பில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை இன்று நேரில் ஆய்வுசெய்ய பதன்கோட் சென்றடைந்தார்.

பஞ்சாப் ஆளுநர் திரு. குலாப் சந்த் கட்டாரியா அவரை வரவேற்றார்.

பிரதமதர் முதலில் ஹிமாச்சல பிரதேச மாநிலம் தரம்சாலாவில் உள்ள காங்ரா பகுதியை பார்வையிடுகிறார்.

❖❖❖❖❖❖❖❖

இஸ்ரோ வி. நாராயணன்

ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதலின் போது இந்தியாவின் அனைத்து செயற்கைகோள்களும் 24 மணிநேரமும் செயல்பட்டு தேவைகளை பூர்த்தி செய்ததாக இஸ்ரோ தலைவர் திரு. வி. நாராயணன் தெரிவித்தார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டின் தொழில்நுட்பத்திறனை வலுப்படுத்தி உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு உத்வேகம் அளித்து, தொழில்நுட்ப மாற்றங்களுக்கு இந்திய விண்வெளித்துறை சிறப்பான பங்களிப்பு புரிவதாக குறிப்பிட்டார்.

இந்நடவடிக்கைகளால் உலகளாவிய விண்வெளி நாடுகளில், இந்திய விண்வெளி தொழில்முனைவோரின் திறன் சிறப்பிடத்தை பெற்றுள்ளதாகவும் பெருமிதம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர துவேதி, உள்நாட்டு உற்பத்தி திறன், ஏற்றுமதி, படைப்பாற்றல் திறன்களால் பாதுகாப்பு மேம்பட்டதோடு தற்சார்பு நிலைக்கான பாதையும முன்னெடுத்துச் செல்லப்படுவதாக கூறினார்

தொழில்நுட்ப மேம்பாட்டால் இலக்குகளும் மாறிவருவதாக கூறியஅவர், நமது தொழில்நுட்பத் திறன்கள் எதிரி நாட்டு தொழில்நுட்பத்தின் தாக்கத்தை தகர்த்தழிப்பதாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

மொரீஷியஸ் பிரதமர்

இந்தியாவிற்கு 8 நாள் அரசுமுறை பயணமாக வருகை தந்துள்ள மொரீஷியஸ் பிரதமர் டாக்டர் நவீன் சந்திரா ராம்கூலம், குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு மற்றும் பிரதமர் திரு. நரேந்திரமோடியுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார்.

மும்பையில் நடைபெறவுள்ள வர்த்தக நிகழ்ச்சிகளிலும் அவர் பங்கேற்கிறார்.

இந்தியாவும் மொரீஷியசும் நெருங்கிய நட்புறவு நாடாக திகழ்வதோடு வரலாற்று கலாச்சார மக்கள் பரிவர்த்தனைகளை பகிர்ந்து கொள்வதாகவும், வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் கடந்த மார்ச் மாத மொரீஷியஸ் பயணமும், டாக்டர் ராம்கூலத்தின் தற்போதைய இந்திய பயணமும் இருநாடுகளுக்கு இடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖

எஸ்.ஜெய்சங்கர்

உலகளவில் தென்னாடுகளின் குரலை ஓங்கி ஒலிக்கச்செய்வதில் இந்தியாவின் அளப்பரிய பணி தொடரும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் உறுதிபட தெரிவித்துள்ளார்

3-வது சர்வதேச தென்னாடுகளின் இளையோர் கூட்டமைப்பில் இன்று உரையாற்றிய அவர், தென்னாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் உள்ள ஒத்த கருத்தையும், உணர்வுகளையும் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழகம் அனைத்து துறைகளிலும் முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று நடைபெறும் ஊடக கருத்தரங்கில் காணொலி மூலம் உரையாற்றிய முதலமைச்சர் அனைத்து பிரிவினரும் கல்வியிலும், பொருளாதாரத்திலும் மேம்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

இதனிடையே திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் தலைமையில் அக்கட்சியின் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் சென்னையில் காணொலி வாயிலாக இன்று நடைபெற்றது.

சட்டப்பேரவை தேர்தல் நிலைப்பாடுகள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

தமிழகத்தில் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தால் ஒருகோடியே 15 லட்சம் மகளிர் பயன்பெற்றுள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 17 துறைகளை சார்ந்த, 5 ஆயிரம் பயனாளிகளுக்கு, 253 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை இன்று வழங்கியதோடு 3 ஆயிரத்து 846 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார்.

முடிவுற்ற திட்டப்பணிகளை துவக்கி வைத்த அவர், புதிய பணிகளுக்கும் அடிக்கல்நாட்டினார்.

❖❖❖❖❖❖❖❖

சீமா அகர்வால்

தமிழகத்தில் 7 இடங்களில் புதிய தீயணைப்பு நிலைய அலுவலகங்கள் அமைக்க மாநில அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தீயணைப்புத் துறை இயக்குநர் திருமதி. சீமா அகர்வால் தெரிவித்துள்ளார்

வேலூரில் தீயணைப்பு நிலையங்களின் வருடாந்திர ஆய்வு கூட்டத்திற்கு பின்னர் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், வடகிழக்கு பருவமழையால் ஏற்படும் இடர்பாடுகளை எதிர்கொள்ள தீயணைப்புத்துறையினர் தயார் நிலையில் உள்ளதாக குறிப்பிட்டார்.

பேரிடர் மீட்பு ஒத்திகை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

திருப்பூர்

மத்திய அரசின் சரக்கு சேவை வரி குறைப்பால் திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த ஆயத்த ஆடை தயாரிப்பாளர்களுக்கு பெரிதும் பயனளிப்பதாக தொழில்முனைவோர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

ராணிப்பேட்டை – வாய்ஸ்

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா அரசு மகளிர் கலை கல்லூரியில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் உற்பத்தி பொருட்கள் கண்காட்சி நடைபெற்றது.

கல்லூரியில் படிக்கும் போதே மாணவிகள் உற்பத்தி செய்யும்பொருட்களை விற்பனை செய்தால் அவர்களின் பொருளாதாரம் வளர்ச்சி அடைவதாக ஆட்சித்தலைவர் டாக்டர் சந்திரகலா தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

சேலம் - வாய்ஸ்

சேலம் மாவட்டத்தில் ஊட்டசத்து தொடர்பாக செவிலியர் பயிற்சி கல்லூரி மாணாக்கருக்கு நடைபெற்ற விழிப்புணர்வு முகாமில் ஊட்டசத்து உணவுகளின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கப்பட்டதாக மாணவிகள் தெரிவிக்கின்றனர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

தர்மபுரி மாவட்ட விளையாட்டரங்கில் மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சதீஷ் இன்று துவக்கி வைத்தார்.

நாமக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா விருதுகளுக்கு, சுற்றுலா சார்ந்த தொழில் முனைவோர்கள் வரும் 15-ம் தேதிக்குள் இணைதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி. துர்காமூர்த்தி தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கோவை, நீலகிரி, செங்கல்பட்டு, விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, திருச்சி, சேலம், தர்மபுரி, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது

தென்தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் வரும் 13-ம் தேதிவரை இப்பகுதிகளுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

17-வது ஆசியகோப்பை 20-20 கிரிக்கெட் போட்டிகள் அபுதாபியில் இன்று தொடங்குகின்றன.

முதல் போட்டியில் இன்று ஆப்கானிஸ்தான் - ஹாங்காங் அணிகள் மோதுகின்றன.

குரூப் - ஏ பிரிவில் இந்தியா நாளை ஐக்கிய அரபு எமிரேட்ஸை, துபாயில் எதிர்கொள்கிறது.

வரும் 28-ம் தேதிவரை இப்போட்டிகள் நடைபெறுகின்றன.

❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

ஹாங்காங் ஓப்பன் பேட்மிட்டன் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

ஆடவர் இரட்டையர் முதல்சுற்றில் இந்தியாவின் ரான்கி ரெட்டி, சிராக் ஷெட்டி இணை - தாய்வான் இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖